# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1948/4 - 2016 ජනවාරි මස 04 වැනි සඳුදා - 2016.01.04

1948/4 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு சனவரி மாதம் 04 ஆந் திகதி திங்கட்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி III - காணிகள்

### காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது குறிப்பு இலக்கம்.: 8/3/5/25.

காணி அமைச்சின் குறிப்பு இலக்கம்.: 4/3/15/2011/VE/45.

ஒரு பகிரங்க தேவைக்கு வேண்டியதான கீழ்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியாளர் எண்ணியிருக் கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தல் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்ட வாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் பிரகாரம் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:-**

மத்திய மாகாணத்தில் மாத்தளை மாவட்டத்தில் மாத்தளை பிரதேச செயலாளர் பிரிவிலே கம்பஹசிய பத்துவ சிறு பிரிவில் உடவரதமுன் கிராமத்தில் அமைந்துள்ள, நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட, இலக்கம் பூ. வ. மா/1629 கொண்ட முதற்சுவட்டு வரைபடத்தில் துண்டு இலக்கம் 1, 2 காணித் துண்டுகளின் எல்லைகள்,

**1. துண்டு இலக்கம் 1 - ஹபுகஹலந்த வத்த - விஸ்தீரணம்: 0.3591 ஹெக்டயார்—ஆரம்ப உரித்து காணிச்சீர்திருத்த ஆணைக்குழு**

வடக்கு: எஸ். சொத்திலிங்கம் உரிமை கோரும் ஹபுகஹலந்த வத்த; கிழக்கு: ரீ. ஜீ. கருணாரத்ன மற்றும் ஏனையோரும் உரிமை கோரும் ஹகுகஹலந்த வத்த; தெற்கு: வீதி ; மேற்கு: வீதி (பிரதேச சபை).

**2. துண்டு இலக்கம் 2 - ஹபுகஹலந்த வத்த - விஸ்தீரணம்: 0.8561 ஹெக்டயார் - ஆரம்ப உரித்து காணிச்சீர்திருத்த ஆணைக்குழு**

வடக்கு: வீதி (பிரதேச சபை), வீதி, கிழக்கு: காணிச் சீர்திருத்த ஆணைக்குழு உரிமை கோரும் ஹபுகஹலந்த வத்த, வீதி; தெற்கு: காணிச்சீர்திருத்த ஆணைக்குழு உரிமை கோரும் ஹபுகஹலந்த வத்த; மேற்கு: வீதி (பிரதேச சபை).

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப் பட்ட காரியக்காரர் மூலமாக 2016 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 26 ஆம் திகதி மு.ப. 9.00 மணிக்கு மத்தளை பிரதேச செயலகத்தில் என்முன்பாக வெளிப்படுத்தும் படியும்,

மேலும், அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தை களின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங் களையும், நஷ்ட ஈட்டுத் தொகைகளையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2016 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 19 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் முப் பிரதிகளாக எனக்கு அறிவிக்கும் படியும் இத்தால் கேட்டுக்கொள்ளப் படுகின்றனர்.

கே. பி. கே. எல். பி. மதுவந்தி,
பிரதேச செயலாளர்,
மாத்தளை.

பிரதேச செயலகம்,
மாத்தளை,
2015, திசெம்பர் 29.

1 - 650


*இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

## திருத்தம்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

மேற்படி தலைப்பின் கீழ் 2015, சனவரி 05 ஆந் திகதிய 1896/6 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிஷேட வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்ட மேற்படி அறிவித்தலில் பின்வருமாறு நில அளவை இலக்கம் திருத்தம் செய்யப்படுகின்றது என்பதை இத்தால் பகிரங்க அறிவித்தல் செய்கின்றேன்.

| நீக்கப்பட்ட பகுதி | பதிலாக சேர்க்கப்பட்ட பகுதி |
|---|---|
| VA/VA/2014/140 | Topo PP No. 57 |

கா. உதயராஜா,
பிரதேச செயலாளர்,
வவுனியா.

பிரதேச செயலகம்,
வவுனியா,
2015, திசெம்பர் 21.

1 - 652/1

## திருத்தம்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

மேற்படி தலைப்பின் கீழ் 2015, மாச்சு 02 ஆந் திகதிய 1904/4 இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிஷேட வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்ட மேற்படி அறிவித்தலில் பின்வருமாறு நில அளவை இலக்கம் திருத்தம் செய்யப்படுகின்றது என்பதை இத்தால் பகிரங்க அறிவித்தல் செய்கின்றேன்.

| நீக்கப்பட்ட பகுதி | பதிலாக சேர்க்கப்பட்ட பகுதி |
|---|---|
| VA/VAV/2014/141 | Topo PP No. 57 |

கா. உதயராஜா,
பிரதேச செயலாளர்,
வவுனியா.

பிரதேச செயலகம்,
வவுனியா,
2015, திசெம்பர் 21.

1 - 652/2

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.